# தொழில் மலர் 2024

தினபூமி

29.10.2024


### 46 புதிய தொழிற்சாலைகள் மூலம்

# தமிழகத்தில் 1.39 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

தமிழகத்தில் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடுகள் நடத்தப்பட்டு, புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் பணிகள் தொடங்கப்பட்டன. முதற்கட்டமாக, முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பெயரில் சென்னை கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் மூலம் ரூ.**1,90,803** கோடி ரூபாய்க்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, **2,80,600** பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக, ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு **17** ஆயிரத்து **371** பேருக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகிற வகையில், **7** ஆயிரத்து **441** கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டன.

மூன்றாம் கட்டமாக, **2024** ஜனவரி **7, 8** ஆகிய நாட்களில் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தமிழ்நாடு அரசு நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முன் எப்போதும் இல்லாத அளவாக, **631** ஒப்பந்தங்கள் மூலம் **6,64,180** கோடி ரூபாய் முதலீடுகளும், அவற்றின் மூலம் **14,54,712** பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளும் **12,35,945** பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் என மொத்தம் **26,90,657** வேலைவாய்ப்புகளுக்கு உறுதி செய்யப்பட்டன.

நான்காம் கட்டமாக, ஜனவரி **27, 2024** அன்று புறப்பட்டு ஸ்பெயின் நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்று அங்குள்ள பொருளாதாரம் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சக அதிகாரிகள், ஸ்பெயின் தொழில் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், இன்வெஸ்ட் ஸ்பெயின் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆகியோரைச் சந்தித்து தமிழகத்தில் உள்ள தொழில் வாய்ப்புகளையும், அரசு வழங்கும் சலுகைகளையும், கிடைக்கும் திறன் வாய்ந்த மனித வளத்தையும் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட வருமாறு முதல்வர் ஸ்டாலின் அழைப்பு விடுத்தார். அவற்றின் பயனாக ரூ.**3,440** கோடி ரூபாய் அளவிற்குத் தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**5**-வது கட்டமாக, முதல்வர் ஸ்டாலின், **22-9-2024** அன்று அமெரிக்கா பயணம் மேற்கொண்டு உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களின் முதலீட்டாளர்களைச் சந்தித்து தமிழ்நாட்டில் உள்ள தொழில் வாய்ப்புகளையும் ஆற்றல் வாய்ந்த மனித வளங்களையும் எடுத்துரைத்து தொழில் தொடங்கிட வருமாறு அழைப்பு விடுத்தார்கள். அதன் பயனாக அமெரிக்காவில் **19** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. அந்த ஒப்பந்தங்கள் மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு **11,516** புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழக முதல்வர் ஸ்டாலின், கடந்த **21-8-2024** அன்று, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைச் சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் **17,616** கோடி ரூபாய் முதலீட்டில் **19** தொழில்சாலைகளைத் திறந்து வைத்துள்ளார். அவை பின்வருமாறு:

- திருவள்ளூர் மாவட்டத்தில் மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் ஓம்ரான் தொழிற்சாலை.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் இயந்திர மின்னணுவியல் தயாரிக்கும் ஹி-பி **(Hi-Pi)** நிறுவனத் தொழிற்சாலை.
- அதே காஞ்சிபுரம் மாவட்டத்தில் மின்னணுவியல் தயாரிக்கும் மதர்சன் எலெக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலை.
- அதே காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஜூரோஜின் டெவலப்மெண்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தொழில் பூங்கா.
- திருவள்ளூர் மாவட்டத்தில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் டி.வி.எஸ்.தொழிற்சாலை.
- சென்னையில் தகவல் தொழில்நுட்பத் துறையில் எல் அண்ட் டி நிறுவனத்தின் புத்தாக்க மையம்.
- செங்கல்பட்டு மாவட்டத்தில் தொழில்நுட்ப மையம் சார்பில் ரோனால்ட் நிஸ்ஸான் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக மையம்.
- சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் சுந்தரம் ஃபாஸ்டனர்ஸ் தொழில் நிறுவனத்தின் பொது உற்பத்தி மையங்கள்.
- காஞ்சிபுரம், ராணிப்பேட்டை மாவட்டங்களில் எஸ்ஜாய் குழுமம் சார்பில் இரசாயனத் தொழிற்சாலை.
- ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் ஏனஸ் ராம்ராஜ் நிறுவனத்தின் ஆடைகள் தயாரிப்பு தொழிற்சாலை.
- திருவள்ளூர் மாவட்டத்தில் மருத்துவப் பொருள்கள் தயாரிக்கும் கேப்னின் பாய்ண்ட்ஸ் தொழிற்சாலை.
- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வெக் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் பொது உற்பத்தி தொழிற்சாலை.
- ஈரோடு மாவட்டத்தில் மில்க்கி மிஸ்ட் நிறுவனத்தின் உணவு பதப்படுத்துதல் தொழிற்சாலை.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த குரிட்விண்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பொது உற்பத்தி விரிவாக்கத் தொழிற்சாலை.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஹைபுரோ ஹெல்த் கேர் தொழிற்சாலை விரிவாக்கம்.
- திருவண்ணாமலை மாவட்டத்தில் ராயல் என்பீல்டு நிறுவனத்தின் மோட்டார் வாகன தொழிற்சாலை.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த குரூபோ காஸ்டோஸ் நிறுவனத்தின் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.
- திருவள்ளூர் மாவட்டத்தில் ஜிபி சல்ஃபோனேட்ஸ் தொழிற்சாலையின் இரசாயனத் தொழிற்சாலை.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் மதர்சன் ஹெல்த் நிறுவனத்தின் மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

இந்த **19** தொழிற்சாலைகளிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உற்பத்திகளைத் தொடங்கி வைத்தார்கள். இதன் மூலம் மொத்தம் **17** ஆயிரத்து **616** கோடி முதலீட்டில் தொடங்கப்பட்டவை. இந்த **19** தொழிற்சாலைகளிலும் மொத்தம் **64** ஆயிரத்து **968** இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இவை தவிர மேலும், பல தொழிற்சாலைகளும் தொடங்கப்பட்டு உற்பத்திகளில் ஈடுபட்டுள்ளன. **19** புதிய தொழிற்சாலைகளை தொடங்கி வைத்ததுடன், அதே நாளில் முதல்வர் ஸ்டாலின் **51,157** கோடி ரூபாய் முதலீட்டிலான **28** புதிய தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளார். அந்தத் தொழிற்சாலைகளின் வாயிலாக, **41** ஆயிரத்து **835** இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

## காளான் வளர்ப்பு தொழிலுக்கு எவ்வளவு முதலீடு தேவை?


தோட்டக்கலையில் பல்வேறு தொழில் வாய்ப்புகள் பெருகி வருகின்றன. மக்களிடையே ஆரோக்கியமான உணவுப் பழக்கம் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து வரும் நிலையில் இந்தத் தொழில்களுக்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதில் குறிப்பாக காளான் வளர்த்தல் மற்றும் பதப்படுத்தல் தொழிலில் நல்ல லாபத்தை ஈட்ட முடிகிறது. வெறும் ரூ.**2** லட்சம் மட்டுமே முதலீடு செய்து காளான் வளர்த்தல் மற்றும் பதப்படுத்தல் தொழிலில் அபரிமிதமான லாபத்தை ஈட்டலாம் என்று தோட்டக்கலை நிபுணர்கள் கூறுகின்றனர்.



அண்மைக்காலமாக காளான் வளர்ப்புத் தொழிலில் வேகமாகப் பரவி வருகிறது. அதன் சுவை, ஊட்டச்சத்து மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. சைவப் பிரியர்களின் அசைவ ஆசைக்கு காளான் நிச்சயம் தீனி போடும் அளவுக்கு அதன் சுவையும் மணமும் அமைந்துள்ளது. உடல் எடை குறைப்பு பற்றி கவலைப்படுபவர்கள் காளான்களை விரும்பி சாப்பிடுகின்றனர். காரணம் அதில் குறைந்த அளவு கலோரி மற்றும் கொழுப்பு அடங்கியுள்ளது. அத்துடன் உடலுக்குத் தேவையான பல்வேறு ஊட்டச்சத்துகளையும் காளான் கொண்டுள்ளது.

காதி மற்றும் கிராமத் தொழில் ஆணைய திட்டக் குறிப்பின்படி காளான் வளர்ப்பு மற்றும் பதப்படுத்தல் தொழிலுக்கு கீழ்கண்டபடி முதலீடு தேவைப்படுகிறது. காஃபி கடையில் ரூ.**1250** கோடி.. அனுபவமே இல்லாத தொழில் சூப்பர் ஹிட்..! இதுதான் லக்..!! நிலம்- வாடகை அல்லது சொந்தம் கட்டடம் மற்றும் கட்டுமான செலவு- ரூ**5** லட்சம் ஆலை மற்றும் உபகரணங்கள்- ரூ.**8** லட்சம் பர்னிச்சர்கள்- ரூ.**69,000** முன்தொடக்க செலவுகள்- ரூ.**50,000** மொத்தம்- ரூ.**20** லட்சம் **Advertisement** முதலீட்டுக்கான வழிகள் சுய முதலீடு **10** சதவீதமான ரூ.**2** லட்சம் டெர்ம் லோன்- ரூ.**12.77** லட்சம் உற்பத்திக்கான மூலதன பைனான்ஸ்-ரூ.**5.22** லட்சம் மொத்தம்- ரூ.**20** லட்சம் காதி மற்றும் கிராமத் தொழில் ஆணைய திட்ட குறிப்பின்படி, நீங்கள் முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது ஆண்டில் பெறும் விற்பனை முறையே தலா ரூ.**76.95** லட்சம், ரூ.**93.83** லட்சம், ரூ.**107** கோடி, ரூ.**120** கோடி மற்றும் ரூ.**134** கோடி ஆகும். இதில் நிகர லாபம் முதலாண்டு, இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு நான்காமாண்டு மற்றும் ஐந்தாமாண்டில் முறையே ரூ.**8.90** லட்சம், ரூ.**11.32** லட்சம், ரூ.**14.51** லட்சம், ரூ.**17.55** லட்சம் மற்றும் ரூ.**20.44** லட்சம் பெறலாம் என ஆணையக் குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த வருவாய், லாபம் அனைத்தும் உற்பத்தி அளவு, முதலீடு, மார்ஜின் விகிதம் ஆகியவற்றில் மாறுப்படும். எனவே அனைவருக்கும் இத்தகைய லாபம் கிடைக்கும் என்பது இல்லை, அதேவேளையில் காளான் வளர்ப்பில் பெரிய அளவில் வர்த்தகம் செய்பவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் அதிகம். தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் எந்தப் பகுதியிலும் காளான்களை வளர்ப்பதற்கு மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கழகமான **CFTRI** வசதி செய்து தந்துள்ளது. இதற்கான தொழில்நுட்பம் **CFTRI**-யிடம் உள்ளது. காளான் தொழிற்கூடங்களில் உணவுக் கலப்படத் தடை சட்டத்தின் பிரிவுகளை பின்பற்ற வேண்டியது அவசியம்.



## உலிக்கல் (தேர்வு நிலை) பேரூராட்சி

### நீலகிரி மாவட்டம்

### 2023-2024 மற்றும் 2024-25-ம் ஆண்டு திட்டப்பணிகளின் விபரம்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| | 2023 – 2024 | | |
| 1. | தமிழ்நாடு நகர்புற சாலைகள் கட்டமைப்புத் திட்டம் (TURIP) | 1 | 183.00 |
| 2. | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) | 1 | 6.09 |
| 3. | பழங்குடியினர் நல நிதி (ST Welfare Scheme) | 4 | 6.30 |
| 4. | நபார்டு நிதி உதவித் திட்டம் | 1 | 155.00 |
| 5. | 15–வது நிதிக்குழு மானியம் | 13 | 70.90 |
| 6. | 15–வது நிதிக்குழு மானியம் (சுகாதார மானியம்) | 1 | 40.00 |
| 7. | 6–வது நிதிக்குழு மானியம் (பள்ளி மேம்பாடு) | 2 | 32.00 |
| 8. | சிறப்புப் பகுதி மேம்பாடு திட்டம் | 2 | 36.60 |
| 9. | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் | 2 | 6.00 |
| | மொத்தம் | 27 | 535.89 |
| | 2024 – 2025 | | |
| 1. | தூய்மை இந்தியாத் திட்டம் (SBM 2.0) | 2 | 24.75 |
| 2. | நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (NSMT) | 2 | 88.00 |
| 3. | அயோத்தி தாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாடு திட்டம் | 3 | 35.00 |
| | மொத்தம் | 7 | 147.75 |

திருமதி. **லட்சுமி பவ்யா தண்னிரு**, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி மாவட்டம்


திரு. **முகமதுரிஸ்வான்** பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் நீலகிரி மாவட்டம்.

திருமதி. **அ.ராதா** தலைவர்

திரு. **பெ.ரமேஷ்குமார்** துணைத்தலைவர்

திரு. **செந்தில்குமார்** செயல் அலுவலர்

மற்றும் **வார்டு உறுப்பினர்கள்**









## வடுகப்பட்டி பேரூராட்சி

### ஈரோடு மாவட்டம்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணிகளின் எ | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | நபார்டு 2023-2024 | 4 | 641.00 |
| 2 | 15வது நிதிக்குழு மான்யம் | 16 | 135.20 |
| 3 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் | 1 | 85.00 |
| 4 | மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் | 1 | 10.00 |
| 5 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டபேரவை நிதி 110 | 3 | 43.30 |
| 6 | நமக்கு நாமே திட்டம் | 2 | 6.00 |
| 7 | இயக்கம் மற்றும் பாரமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி | 1 | 20.00 |
| 8 | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் | 1 | 2.50 |
| 9 | பள்ளி மேம்பாட்டு மான்யம் | 1 | 10.90 |
| 10 | AMRUT 2.0 - 2023 - 2024 (Park Improvement) | 1 | 21.00 |
| 11 | வடுகபட்டி பேரூராட்சி சர்வே எண்.396/4A வார்டு எண்.3 அறச்சலூர் - கொடுமுடி மெயின்ரோடு பகுதியில் புதிய அலுவலக கட்டிடம் கட்டுதல். | 1 | 120.00 |
| 12 | வடுகபட்டி பேரூராட்சிக்குட்பட்ட ஓடக்காட்டு வலசு முதல் சாமிநாதபுரம், மூவேந்தர் நகர் குறுக்கு வீதிகள், சின்னக்கிணத்துப்பாளையம் மெயின் ரோடு முதல் வினாயகர் கோவில் வரை, பண்ணைக்கிணறு முதல் அவல்பூந்துறை ரோடு பொங்காளிவலசு, அறச்சலூர் - கொடுமுடி ரோடு முதல் பண்ணைக்கிணறு பொதுக்கழிப்பிடம் வரை, அறச்சலூர் - கொடுமுடி ரோடு முதல் தச்சங்காட்டுவலசு மயானம் வரை, செம்பூத்தாங்காடு கஸ்தூரிபா ரோடு பிரிவு முதல் கூத்தம்பட்டி சாலை அறச்சலூர் முதல் ஜெயராமபுரம் ரோடு, தாண்டாம்பாளையம் ஐந்து கிணறு முதல் ஞானபுரம் வரை மற்றும் ஓடாநிலை - தாண்டாம்பாளையம் ரோடு முதல் தம்பிரான்வலசு வரை தார்சாலை அமைத்தல். | 1 | 32.01 |
| | மொத்தம் | 33 | 1423.91 |

**திரு. லோ.பா. அசோக்குமார்** செயல் அலுவலர், வடுகப்பட்டி பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்.

**திருமதி. வி. அம்பிகாபதி** தலைவர், வடுகப்பட்டி பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்.

### ரூ.400 கோடி திட்டத்தில் 500 பேருக்கு வேலைவாய்ப்பு:

# புதிய தொழிற்சாலை அமைக்க ஓமியம் நிறுவனத்துடன் தமிழக அரசு ஒப்பந்தம்




தமிழகம் உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாக விளங்குவதோடு, 39,000-க்கும் மேலான தொழிற்சாலைகள், 2.6 மில்லியன் அளவிற்கு தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள், என இந்திய அளவில் முதலிடம் வகிக்கும் மாநிலமாகவும் விளங்குகிறது.

சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு வளர்ச்சி மையங்கள் மாநிலம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டு, மனிதவளங்கள் மற்றும் திறன்களை முன்வைத்து வளர்ச்சியை மேற்கொண்டு வரும் மாநிலமாகவும் தமிழகம் திகழ்கிறது.

இத்தகைய சிறப்புகளை கொண்ட தமிழகத்தில் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடன் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும், முதல்வர் மு.க.. ஸ்டாலினின் தலைமையிலான அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், தமிழகத்திற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு முறை பயணம் மேற்கொண்ட போது, சான்பிரான்சிஸ்கோவில் கடந்த 29.8.2024 அன்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட்டு இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப் டெக்னாலஜி, இன்பிங்ஸ் ஹெல்த்கேர் மற்றும் அப்ளைடு மெட்டீரியல்ஸ் ஆகிய 6 நிறுவனங்களுடன் 900 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை, கோவை மற்றும் மதுரையில் 4,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதை தொடர்ந்து கடந்த 30.8.2024 அன்று முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆப்பிள், கூகுள் மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்ததோடு, கூகுள் நிறுவனத்துடன் தமிழகத்தில் செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக கடந்த 31.8.2024 அன்று சான்பிரான்சிஸ்கோவில், ஓமியம் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

ஓமியம் நிறுவனம், பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, அளவிடக்கூடிய புரோட்டான் பரிமாற்ற சவ்வு (Proton Exchange Membrane) எலக்ட்ரோலைசர் அமைப்புகளை வடிவமைத்து, உற்பத்தி செய்கிறது.

ஓமியம் நிறுவனமானது அமெரிக்கா, மெக்சிகோ, ஐரோப்பா மற்றும் ஆசியா முழுவதும் உலகளாவிய பசுமை ஹைட்ரஜன் திட்டக் குழாய்களை அமைத்துள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஓமியம் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே எலக்ட்ரோலைசலர்கள் உற்பத்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் துறையில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.




# பாலகொலா ஊராட்சி

உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியம்,
நீலகிரி மாவட்டம்.

## 2024 - 2025ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி பணிகள் விவரம்

| 2023 - 2024ம் ஆண்டு திட்டபணிகள் | |
|---|---|
| ⇨ ஊராட்சி நிதி | ரூ.23.41 இலட்சம் |
| ⇨ J.J.M. வீட்டு குடிநீர் இணைப்பு | ரூ.19.64 இலட்சம் |
| ⇨ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் | ரூ.87.35 இலட்சம் |
| ⇨ 15வது நிதிக்குழு மானியம் | ரூ.140.73 இலட்சம் |
| ⇨ PMAY வீடுகள் 143 பயனாளிகள் | ரூ.343.20 இலட்சம் |
| ⇨ ஊரக சாலை அமைத்தல் | ரூ.132.92 இலட்சம் |

திருமதி. லட்சுமி பவ்யா தண்னிரு,இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி மாவட்டம்

திருமதி. M.கலையரசிமுத்து
தலைவர், பாலகொலா ஊராட்சி

திரு. மஞ்சை V.மோகன்
துணைத்தலைவர், பாலகொலா ஊராட்சி

திரு. அண்ணாதுரை
வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)

திரு. சலீம்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)

திரு. K.கார்த்திக்
ஊராட்சி செயலர்

மற்றும் வார்டு உறுப்பினர்கள்



# தூனேரி ஊராட்சி



உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியம்,
நீலகிரி மாவட்டம்.

## 2024 - 2025ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி பணிகள் விவரம்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | 15வது நிதிக்குழு மானியத்தில் குடிநீர் திட்ட பணிகள் | 9 | 11,44,199 |
| 2. | 15வது நிதிக்குழு மானியத்தில் சுகாதார பணிகள் | 4 | 9,04,199 |
| 3. | 15வது நிதிக்குழு மானியத்தில் இதர பணிகள் | 8 | 14,95,599 |
| | மொத்தம் | 21 | 35,43,997 |

* நீலகிரி மாவட்டம் பிளாஸ்டிக் பொருட்கள் முழு தடை செய்யப்பட்ட மாவட்டமாக இருப்பதால் சுற்றுலா பயணிகள் பிளாஸ்டிக் பொருட்கள் கொண்டு வருவதை தவிர்க்க வேண்டும்.

* பொதுமக்கள் ஒவ்வொருவரும் அவரவர் வீட்டில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த வேண்டும்.

* வீட்டுவரி, தொழில்வரி, கடை உரிமம், குடிநீர் கட்டணம் ஆகியவை அனைத்தும் 31.01.2025ந் தேதிக்குள் இணையதளம் மூலம் கட்டிமுடிக்க வேண்டும் என்று ஊராட்சி சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

திருமதி. லட்சுமி பவ்யா தண்னிரு,இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி மாவட்டம்

திருமதி. V.உமாபதி, M.A.,B.Ed.,
தலைவர், தூனேரி ஊராட்சி

திரு. C.சுப்பரமணி
துணைத்தலைவர், தூனேரி ஊராட்சி


திரு. அண்ணாதுரை
வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)

திரு. சலீம்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)

திரு. R.கார்த்திக்
ஊராட்சி செயலர்

மற்றும் தூனேரி ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்







# கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம்

## நீலகிரி மாவட்டம்

### 2023-2024ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 15வது நிதி குழு மானியம் (வட்டார ஊராட்சி) | 21 | 52.23 |
| 2. | 15வது நிதி குழு மானியம் (மாவட்ட ஊராட்சி) | 6 | 21.03 |
| 3. | 15வது நிதி குழு மானியம் (கிராம ஊராட்சி) | 174 | 366.36 |
| 4. | 15வது மத்திய சுகாதார கட்டிடம் | 1 | 120.00 |
| 5. | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் | 22 | 123.77 |
| 6. | ஊராட்சி ஒன்றிய பொதுநிதி | 146 | 271,38 |
| 7. | மாவட்ட ஊராட்சி பொதுநிதி | 9 | 21.00 |
| 8. | அயோத்திதாஸ் பண்டிதர் குக்கிராமம் மேம்பாட்டு திட்டம் | 3 | 20.00 |
| 9. | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் | 426 | 1113.47 |
| 10. | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | 17 | 112.00 |
| 11. | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | 7 | 56.00 |
| 12. | நபார்டு (XXIX) | 1 | 705.68 |
| 13. | பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டம் (PM JANMAN) | 235 | 1,245.43 |
| 14. | தூய்மை பாரத இயக்கம் | 22 | 13.60 |
| 15. | சர்வ சிக் ஷ அபியான் ஒருங்கிணைந்த பள்ளி கட்டிடங்கள் திட்டம் | 5 | 5.50 |
| | மொத்தம் | 1100 | 4,252.08 |

திருமதி. லட்சுமி பவ்யா தண்னிரு,இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி மாவட்டம்

திரு. E.ராம்குமார்
தலைவர்

திருமதி. G.விஜயா
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)

திரு. K.ஸ்ரீதரன்
வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)

மற்றும் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள்

# சமூகப் பொறுப்புணர்வு திட்டங்கள் மூலம் பொறுப்புடன் செயல்படும் ஓ.என்.ஜி.சி.

ஒரு தேசத்தின் எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் எனர்ஜி தேவைகளுக்கு முக்கிய பங்கு வகிக்கும் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு, உலக அளவில் நூற்றுக்கும் குறைவான நாடுகளில் மட்டுமே கிடைக்கிறது அவற்றில் இந்தியாவும் ஒன்று என்பதில் இந்தியனாக நாம் பெருமை கொள்ள வேண்டும் (பட்டியலில் இந்தியா 26-ம் இடத்தில் உள்ளது) இந்தியாவிலும் ஏழு அல்லது எட்டு மாநிலங்களில் மட்டுமே நிலப்பகுதியில் அவை அபரிமிதமாகக் கிடைக்கும் புவியியல் வாய்ப்பு உள்ளது. அவற்றில் ஒன்று தமிழகம் என்பதற்காக தமிழனாக நாம் பெருமை கொள்ள வேண்டும்.

தமிழகத்திலும் ஏழு அல்லது எட்டு மாவட்டங்களில் மட்டுமே கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கிடைக்கும் புவியியல் அமைப்பு உள்ளது. இந்திய அளவில் நிலப்பகுதி இயற்கை எரிவாயு உற்பத்தியில் தமிழகம் இரண்டாம் இடத்தில் உள்ளது என்பது நமக்கு கூடுதல் பெருமை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தி செய்வது ஓ.என்.ஜி.சி. நிறுவனம் மட்டுமே. 1958 தொடங்கி 1985 வரையிலான பல்வேறு ஆய்வுகளுக்கு பிறகு துரப்பணப் பணிகளை தமிழ்நாட்டில் அடியக்கமங்கலம் மற்றும் கோவில் களப்பால் ஆகிய இடங்களில் தொடங்கியது 1988 முதல் 2020 (பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல சட்டம் அமல்படுத்தப்படும்) வரை துரப்பணப் பணிகள் தொடர்ந்தன ஓ.என்.ஜி.சி.யின் நேரடி பணியாளர்களுடன் பல்லாயிரக்கணக்கான ஒப்பந்தப் பணியாளர்களும் வேலை வாய்ப்பு பெற்று ஓ.என்.ஜி.சி. வளர்ச்சிக்கு உதவினர். அதன் பிறகு துரப்பணம் முழுதுமாக டெல்டா மாவட்டங்களில் நிறுத்தப்பட்டு இருக்கின்ற கிணறுகளை மட்டும் பராமரித்து கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு எடுத்து தேச வளர்ச்சிக்கு உதவி வருகிறது ஓ.என்.ஜி.சி.

தன் குழந்தைகளை வயிற்றில் வைத்து இந்த உலகத்தில் கண் திறக்கும் வரை சுமப்பதோடு, பிறந்த பிறகு உணவு ஊட்டி பேணுபவள் தாய். அதே போல காவிரி டெல்டா நிலம் நமக்கு வளம் தருகிறது. நமக்கு உணவளிக்க மேற்பரப்பில் விளையும் தானியங்கள் மற்றும் உணவுகள் போன்றவற்றோடு அவற்றைச் சமைக்கத் தேவையான எரிவாயு மற்றும் வளமான வாழ்வுக்குத் தேவையான எண்ணெய் மற்றும் தாதுக்களை ஆயிரக்கணக்கான மீட்டர் ஆழத்தில் இருந்து தருகிறாள் இயற்கை அன்னை.

ஓ.என்.ஜி.சி. காவேரி அசெட், காவிரி டெல்டா பகுதியின் நிலத்திலிருந்து இயற்கை அன்னை அளித் தரும் இந்தப் பரிசுகளை அங்கீகரித்து, பூமியையும் அதன் வளமான மண்ணையும் எந்த வகையிலும் தீங்கு விளைவிக்காமல் பாதுகாக்க உறுதியுடன் செயல்படுகிறது. சமூகப் பொறுப்பு (CSR) என்பது ஒரு சட்டப்பூர்வ கடமை மட்டுமல்ல, அதற்கும் மேலாக சேவை செய்வதற்கும் சீர்திருத்தம் செய்வதற்கும் என்கிற உறுதிப்பாட்டில் இருக்கும் ஓ.என்.ஜி.சி. ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கான ரூபாய்களை அதற்குச் செலவழிக்கிறது.

திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் ராம்நாடு மாவட்டங்கள் உட்பட பல பகுதிகளை உள்ளடக்கிய பல திட்டங்களை ஓ.என்.ஜி.சி. தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது, இதில் கல்வி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பசி ஒழிப்பு, வாழ்வாதார உருவாக்கம், ஊரக வளர்ச்சி, விளையாட்டு, ஸ்வச் பாரத் மற்றும் இன்னும் பல திட்டங்கள் அடங்கும்.

இந்த நோக்கத்திற்காக, ஓ.என்.ஜி.சி. நாகப்பட்டினம் மாவட்டம் கடம்பன்குடியில் மருத்துவ முகாமை ஏற்பாடு செய்து, நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் உள்ள அரசு பொது சுகாதார மையத்திற்கு மருத்துவ உபகரணங்களை வழங்கியது. பல்வேறு இடங்களில் மருத்துவ முகாம் நடத்துகிறது. நல்ல ஆரோக்கியத்திற்கு சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீரின் முக்கியத்துவத்தை ஓ.என்.ஜி.சி. புரிந்து கொண்டு, பல்வேறு இடங்களில் ஆர்ஓ வாட்டர் பிளான்ட்களை நிறுவி வருகிறது. கடந்த ஓராண்டிலிருந்து ஓ.என்.ஜி.சி. வழுத்தூர் கிராமம், வளந்தரவை பஞ்சாயத்து என 30-க்கும் மேற்பட்ட இடங்களில் ஆர்.ஓ. வாட்டர் ஏ.டி.எம்.களை நிறுவியுள்ளது. இந்த ஏ.டி.எம்.கள் பாதுகாப்பான மற்றும் சுத்தமான குடிநீரை வசதியாக வழங்குவது மட்டுமின்றி, நீண்ட தூரம் சென்று குடிநீரை வாங்க வேண்டிய மக்களின் பொன்னான நேரத்தையும் மிச்சப்படுத்துகின்றன.

திருவாரூர் மாவட்டம் கூத்தனூர் சரஸ்வதி கோயிலில் பொது குடிநீர் தேவைக்காக 500 எல்.பி.ஹெச். நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவ ஓ.என்.ஜி.சி. நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. கடலூர் அரசு தலைமை மருத்துவமனையின் கழிவுநீர் சீரமைப்பு பணியை 40 லட்சம் செலவில் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் மேற்கொண்டது. சுய உதவிக் குழுக்கள் மூலம் பெண்கள் மஞ்சப் பையை உருவாக்கி, விற்பனை செய்து வாழ்வில் உயர்வடைய ஓ.என்.ஜி.சி., மஞ்சப் பை ஏ.டி.எம்.களை நிறுவி உள்ளது. இத்தகைய முயற்சிகள் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கைத் தவிர்ப்பதன் மூலம் ஸ்வச் சதாவை (தூய்மை) மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டவை.

மேலும், ஓ.என்.ஜி.சி., தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஸ்வச்சதா பக்வாடாவை

(6-ம் பக்கம் பார்க்க)

கூட்டுறவே! நாட்டுயர்வு!!



ANNATex 50 ANNIVERSARY

**அறிஞர் அண்ணா தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட்., என்.சி.எச்.1**

25, காரைவாய்க்கால் ரோடு, ஈரோடு - 638 001. ✆ 0424 - 2258955

கண்ணை கவரும் பல வண்ணங்களில் படுக்கை விரிப்புகள், துண்டு ரகங்கள், தலையணை உறைகள், அலங்காரத் திரைத்துணிகள் வாங்க சிறந்த இடம்

அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் எங்கள் சங்க ஜவுளிகள் கிடைக்கும்

கிளை விற்பனை நிலையகங்கள் :

1. E.H.29. பவானி தொடக்க கைத்தறி நெ.கூ.சங்கம், 80, மெயின் ரோடு, பவானி

**R. சித்ரா**

கைத்தறி கட்டுப்பாடு அலுவலர் / செயலாட்சியர்

## லக்கம்பட்டி பேரூராட்சி

### ஈரோடு மாவட்டம்.

### பணிகள் விபரம் 2023 - 2024

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 15வது நிதிக்குழு | குடிநீர், திடக்கழிவு மற்றும் வடிகால் அமைத்தல். | 80.40 |
| 2 | அம்ரூத் 2.0 | பேரூராட்சி குடிநீர் திட்டம் மேம்பாடு செய்தல். | 1983.00 |
| 3 | நபார்டு திட்டம் | சாலை அமைத்தல். | 122.00 |
| 4 | பொது நூலக வேலைகள் | கூடுதல் நூலக கட்டிடம் கட்டுதல். | 22.00 |
| 5 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் | பூங்கா மற்றும் திடக்கழிவு திட்ட மேலாண்மை வாகனம். | 19.04 |
| 6 | நமக்கு நாமே திட்டம் | பூங்கா அமைத்தல். | 3.80 |
| 7 | அயோதிதாஸ் பண்டிதர் மேம்பாட்டுத் திட்டம் | வடிகால் அமைத்தல். | 2.00 |
| | | மொத்தம் | 2250.24 |

செயல் அலுவலர்,
லக்கம்பட்டி பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

தலைவர்,
லக்கம்பட்டி பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.



# வாழ்க்கையில் புதிய உயரத்தை எட்ட உதவும் தையல் தொழில்

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் இரண்டாவது இடத்தைப் பெறுவது உடை. உடை அணிவது தேவைக்கு மட்டுமின்றி, தோற்றத்தை உயர்த்திக் காட்டவும் அணியப்படுகிறது. எனவே தான் ஆள்பாதி... ஆடை பாதி என்று சொன்னார்கள். உடைகள் உடுத்துவதில் ஆண்களும், பெண்களும் பல்வேறு மாற்றங்களைச் செய்து வருகின்றனர். பல்வேறு மாடல்களிலும், டிசைன்களிலும் ஆண்களுக்கான உடைகளும், பெண்களுக்கான உடைகளும் தயாரிக்கப்படுகின்றன.

பண்டிகைக் காலங்கள், திருமண விழாக்கள் உள்ளிட்ட சுப நிகழ்ச்சி காலங்கள் மட்டுமின்றி அன்பளிப்பு வழங்குவது, தள்ளுபடி காலங்கள், சீருடைத் தேவை போன்ற காரணங்களாலும் ஆடைகளின் தேவையும், விற்பனையும் அதிகரித்து வருகின்றன. எனவே ஆடைகளின் தேவையை மையமாக வைத்து, அதுசார்ந்த தொழிலான தையல் தொழிலை முறையாக திட்டமிட்டு செய்தால், நல்ல வருவாய் ஈட்ட வாய்ப்புள்ளது.

ஜவுளி ஆலைகள் அமைப்பதற்கோ, ஜவுளி ஷோரூம்கள் அமைப்பதற்கோ பெரிய முதலீடு தேவைப்படும். ஆனால் தையல் தொழிலை தொடங்குவதற்கு அதிக முதலீடு தேவையில்லை. இத்தொழிலை முறையாக கற்றுக் கொண்டு சிறியளவில் துவங்கி படிப்படியாக வளர்ச்சி பெற முயற்சிக்கலாம்.ஆண்களுக்கும், பெண்களுக்கும் தேவையான ஆடை வகைகள், குழந்தைகளுக்கான ஆடை வகைகள் போன்றவற்றை நேர்த்தியாகத் தைத்துக் கொடுக்கும் அனுபவத்தை வளர்த்துக் கொண்டால் இத்தொழிலை சிறப்பாக நடத்தலாம்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகிய அனைத்துத் தரப்பினருக்கும் ஆடை தைத்துத் தருவோரை விட குறிப்பிட்ட தரப்பினருக்கு மட்டும் தைத்துத் தரும் டெய்லர்கள் அதிகம் உள்ளனர். அனைத்து தரப்பினருக்கும் தைத்துத் தர அதிக அனுபவம் தேவை.அதனால் ஆண்களின் ஆடைகளை தைக்கும் டெய்லர், பெண்களின் ஆடைகளைத் தைக்கும் டெய்லர் போன்றவர்களை இணைத்து தையல் தொழிலைச் செய்யலாம்.

தையல் தொழிலை கடைகளை முக்கியப் பகுதியில் வாடகைக்குப் பிடித்துத் தான் செய்ய வேண்டும் என்பதில்லை. ஆரம்பகாலத்தில் வீட்டிலேயே இயந்திரங்களை வாங்கி வைத்தும் செய்யலாம். தனியாகவோ, பணியாட்களுடனோ தையல் இயந்திரங்களை வாங்கி வைத்துச் செய்யலாம்.நாம் செய்யும் டெய்லரிங் வேலையை பிறருக்குத் தெரியப்படுத்த வேண்டியது தான் முக்கியம். அதன் பிறகு படிப்படியாக இடவசதிக்கேற்ப விரிவாக்கி கொள்ளலாம். பின்னர் வேறு இடங்களுக்கோ, முக்கியப் பகுதிகளுக்கோ மாற்றி பெரிய நிறுவனமாகக் கூட அமைத்துக் கொள்ளலாம்.

என்னதான் ரெடிமேட் ஆடைகள் விற்பனை செய்யப்பட்டாலும், அது அனைவருக்குமே பொருந்தி விடுவதில்லை. துணியாக எடுத்துத் தைப்பவர்களின் எண்ணிக்கை எப்போதும் போலவே உள்ளன. எனவே டெய்லரிங் தொழிலுக்கு வாய்ப்பு எப்போதும் உண்டு. பண்டிகைக் காலங்கள் வந்து விட்டால் டெய்லர்கள் பிசியாகி விடுவது எப்போதும் போலவே உள்ளது. அவர்களிடம் அவசரமாக வேண்டும் என்று தைத்துத்தர கொடுத்தால் சற்று தாமதமாகும் என்று நேரம் கேட்கும் நிலையே உள்ளது. பள்ளிகள், செக்யூரிட்டி நிறுவனங்கள், மருத்துவமனைகள், உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் சீருடைகள் அவசியம் என்பதால் அவர்களுக்கு சீருடை தைத்துத்தரும் வாய்ப்புகளும் உள்ளன.

இது போன்ற நிறுவனங்களுக்குச் சென்று மொத்தமாக ஆர்டர்கள் கேட்கலாம். ஜவுளிக்கடைகள் அதிகம் உள்ள பகுதிகளிலோ, குறிப்பிட்ட ஜவுளிக்கடைகள் உள்ள பகுதிகளிலோ விளம்பரம் செய்து உடனடியாக தைத்துக் கொடுக்கப்படுவதும் உண்டு. அது போன்ற பகுதிகளில் கடைகள் அமைத்து தைத்துக் கொடுக்கும் பணிகளில் ஈடுபடலாம். போதிய டெய்லரிங் ஆட்கள் கைவசம் இருக்க வேண்டியது அதிகளவு ஆர்டர்களின் போது அவசியம். இல்லாவிட்டால் தைத்துக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டு ஆர்டர்கள் கைநழுவிச் செல்லும் வாய்ப்புண்டு.

தையல் (டெய்லரிங்) தொழிலில் ஈடுபடுவோர் பல்வேறு விவரங்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். தையல் தொழில் செய்யும் பிற தையல் கலைஞர்களை தெரிந்து வைத்துக் கொண்டு அவர்களோடும் நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.அப்போது தான் மொத்த ஆர்டர்கள் அதிகளவில் வரும் போது, நம்மிடம் பணியாற்றும் தையற் கலைஞர்களால் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க முடியாத நிலை இருந்தாலும் நட்புறவு கொண்டுள்ள தையற் கலைஞர்களிடம் கொடுத்து ஆர்டர்களை முடித்துத் தரலாம்.

இதனால் அவருக்கும் தொழில் வாய்ப்பு கிடைக்கும். இதற்கு கமிஷனாக குறிப்பிட்ட தொகையை பெற்றுக் கொள்ளலாம்.அது போல் துணி வகைகள், நூல் வகைகள் உள்ளிட்ட பொருட்களை மொத்தமாக வாங்கும் கடைகளையும் அறிந்து வைத்திருப்பது நல்லது.

பள்ளிகள் போன்றவற்றுக்கு சீருடைகள் தைத்துத் தரும் ஆர்டர்கள் கிடைக்கும் நிலையில், அதற்கான துணிகளை மொத்தமாக வாங்கினால் தான் குறைந்த விலைக்கு தைத்துத்தர முடியும்.விலையை அதிகம் வைத்து தைத்தால், குறைந்த விலை கேட்கும் வேறொருவருக்கு ஆர்டர் போய்விடும். இல்லாவிட்டால் கணிசமான அளவிற்கு வருவாய் குறையும்.

காலத்திற்கேற்ப மாறி வரும் ஆடை வடிவமைப்புகளை தெரிந்துகொள்ள வேண்டும்.அவற்றை தைத்துத் தரும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். புதுவித டிசைன்களையும் அறிந்து அதற்கேற்ப தயாரிக்கும் தொழில் நுட்பத்தை புகுத்த முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பிற்கேற்ப செய்து தர முடியும். வாடிக்கையாளர்களும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்.

தையல் பயிற்சிகள் பல்வேறு இடங்களில் வழங்கப்படுகிறது. இவ்வாறு துவங்கி இத்தொழிலை திறம்படச் செய்ய முயற்சிக்கலாம்.


Ph : 04256 - 236653 GSTIN : 33AAAAK2376A1Z8

GOOD TEX குட் டெக்ஸ்

ஈ.எச்.52 குட்டிபாளையம் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்.,

குட்டிபாளையம் - 638 312. ஜம்பை (வழி), பவானி (தாலுக்கா), ஈரோடு மாவட்டம்

சங்கத்தில் உற்பத்தி செய்யும் இரகங்கள் 2/17 துண்டு, பனியன் மேட், காட்டன் மேட், யோகா மேட் மற்றும் ஜமக்காளம் ஆகியவை உற்பத்தி செய்து விற்பனை

அ.சரண்யா
கைத்தறி ஆய்வாளர் / செயலாட்சியர்

K.B. ஜெகநாதன்
மேலாளர்

S.G. மாதேஸ்வரன்
முதுநிலை எழுத்தர்

R. ஆறுமுகம்
அப்ரைசர்

S.D. பூங்கோதை
கணினியாளர்

மற்றும் சங்க உறுப்பினர்கள்








பெத்தாம்பாளையம் (இரண்டாம்நிலை)பேரூராட்சி
ஈரோடு மாவட்டம்

2023-2024 மற்றும் 2024-2025 - ம் ஆண்டு திட்டப்பணிகள்

| வ. எண் | திட்டப்பணிகள் விபரம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நபார்டு திட்டம் (RIDF - XXIX) 2023 - 2024 | 1 | 87.00 |
| 2. | நமக்குநாமே திட்டம் (NNT) 2023 - 2024 | 1 | 1.50 |
| 3. | 15 வது நிதி ஆணைய மான்யம் (டைய்டு மான்யம்) 2023 - 2024 | 4 | 40.77 |
| 4. | 15 வது நிதி ஆணைய மான்யம் (அன் டைய்டு மான்யம்) 2023 - 2024 | 3 | 28.07 |
| 5. | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2024 - 2025 | 1 | 52.00 |
| 6. | நகர்புறசாலை மேம்பாட்டு திட்டம் - 2024 - 2025 | 1 | 52.00 |
| 7. | மாநில நிதி ஆணையம் சாலை மேம்பாட்டு நிதி 2024 - 2025 | 1 | 77.89 |
| 8. | இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (O & M) 2024 - 2025 | 1 | 36.50 |

| | | |
|---|---|---|
| இர.பாலாஜி<br>செயல் அலுவலர் (பொ)<br>பெத்தாம்பாளையம் பேரூராட்சி<br>ஈரோடு மாவட்டம் | ந.மா. தங்கவேல்<br>துணை தலைவர்<br>பெத்தாம்பாளையம் பேரூராட்சி<br>ஈரோடு மாவட்டம் | த. பூங்கொடி<br>தலைவர்<br>பெத்தாம்பாளையம் பேரூராட்சி<br>ஈரோடு மாவட்டம் |

வார்டு உறுப்பினர்கள்

1- வது வார்டு - திருமதி. எஸ்.நவமணி
2- வது வார்டு - திருமதி. ஆ.ஜமுனா
3- வது வார்டு - திரு. கேஇன்.சுரேஷ்குமார்
4- வது வார்டு - திரு. ஈ.எஸ்.ரமேஷ்குமார்
5- வது வார்டு - திரு. எஸ்.இளங்கோ
6- வது வார்டு - திரு. ஓ.எஸ்.கந்தசாமி
7- வது வார்டு - திருமதி. ஜி.மல்லிகா
9- வது வார்டு - திருமதி. கோ.கலைச்செல்வி
10- வது வார்டு - திருமதி. ஆர்.பாரதி
11- வது வார்டு - திருமதி த.கோமதி
12- வது வார்டு - திருமதி. எம்.சீதாலட்சுமி
13- வது வார்டு - திரு. வீ.குப்புசாமி
15- வது வார்டு - திருமதி. எஸ்.எம்.பழனியம்மாள்








வாய்மையே வெல்லும்

சித்தோடு (தேர்வுநிலை) பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்.

2021 - 2022 ஆம் ஆண்டு திட்டபணிகள் விபரம்

| வ. எண் | திட்டப்பணிகள் விபரம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 15வது நிதிக்குழு மானியம் 2020-2021 (அடிப்படை மானியம்) | 1 | 13.00 |
| 2 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) | 1 | 134.80 |
| 3 | முலதன மானிய நிதி 2021-2022 | 1 | 30.00 |
| 4 | 15வது நிதி ஆணைய மானியம் | 2 | 11.50 |
| 5 | இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2021-2022 | 2 | 34.50 |
| | மொத்தம் | **7** | **223.80** |
| | **2022 - 2023 ஆம் ஆண்டு திட்டபணிகள் விபரம்** | | |
| 1 | SBM2.0 - திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM) | 1 | 40.64 |
| 2 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 | 2 | 16.25 |
| 3 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் | 1 | 93.16 |
| 4 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்ட நிதி | 1 | 20.00 |
| 5 | 15வது நிதி ஆணைய மானியம் | 4 | 21.50 |
| 6 | நமக்கு நாமே திட்டம் | 1 | 16.00 |
| | மொத்தம் | **10** | **207.55** |
| | **2023 - 2024 ஆம் ஆண்டு திட்டபணிகள் விபரம்** | | |
| 1 | 15வது நிதி ஆணைய மானியம் | 12 | 83.06 |
| 2 | நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (NSMT) | 1 | 41.80 |
| 3 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் | 2 | 142.05 |
| 4 | அம்ருத் 2.0 திட்டம் | 1 | 19.00 |
| 5 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLA FUND) | 2 | 48.00 |
| 6 | நமக்கு நாமே திட்டம் | 1 | 18.00 |
| 7 | மூலதன மானிய நிதி (CGF) | 1 | 18.00 |
| 8 | 15வது நிதி ஆணைய சுகாதார மானியம் (15th SFC) | 1 | 50.00 |
| 9 | இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி | 2 | 34.65 |
| 10 | நபார்டு | 1 | 92.00 |
| 11 | பள்ளி மேம்பாட்டு மானியம் - ஆறாவது நிதி குழு மானியம் | 1 | 4.80 |
| | மொத்தம் | **25** | **551.36** |
| | **2024 - 2025 ஆம் ஆண்டு திட்டபணிகள் விபரம்** | | |
| 1 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 | 2 | 10.50 |
| 2 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் | 1 | 57.00 |
| 3 | நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் | 1 | 119.99 |
| 4 | 15வது நிதி ஆணைய மானியம் | 1 | 6.00 |
| | மொத்தம் | **5** | **193.49** |
| | பெருமொத்தம் | **47** | **1176.20** |

| | | |
|---|---|---|
| து.கோமதி<br>செயல் அலுவலர் | திரு. K.C.தங்கவேல்<br>துணைத்தலைவர் | **கண்ணகி தம்பணன்**<br>தலைவர் |

வார்டு உறுப்பினர்கள்

1- வது வார்டு - சு.கோமளாதேவி சுப்பிரமணியன்
2- வது வார்டு - மு.வரதராஜன்
3- வது வார்டு - பா.சித்ராதேவி பாலாஜிராஜன்
4- வது வார்டு - வி.முருகம்மாள் விஜயகுமார்
5- வது வார்டு - ந.கவிதா நந்தகோபால்
6- வது வார்டு - சு.ரமேஷ்
7- வது வார்டு - தீ.நதியா தீபக்
8- வது வார்டு - செ.குமார்
9- வது வார்டு - மா.தேன்டிமொழி மாரியப்பன்
10- வது வார்டு - அ.தனலட்சுமி அருணாச்சலம்
11- வது வார்டு - சு.அம்பிகா சுரேஷ்குமார்
13- வது வார்டு - அ.சுப்பிரமணியம்
15- வது வார்டு - கு.வசந்தி குமார்

## தமிழகத்தில் 3 முக்கிய நகரங்களில் ரூ.850 கோடி முதலீடு செய்யும்

# 3 அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுடன் ஒப்பந்தம்

தமிழகத்தில் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், உலக தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் துறை சார்ந்த தொழில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருவதுடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்கள், புத்தாக்கத் திட்டங்கள், திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற புதிய திட்டங்களை பெருமளவில் ஈர்ப்பதற்காக துறை சார்ந்த கொள்கை அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளது.



இவ்வாறான செயல்பாடுகள் மூலம், உலக அளவில் ஏற்பட்டு வரும் தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சிக்கு ஏற்ப, தமிழகத்தின் தொழில் துறையும், மாற்றங்களை மேற்கொண்டு அதே வேகத்தில் பயணம் மேற்கொண்டு வருகிறது. உற்பத்தித் துறையில், உலக அளவில் சிறந்து விளங்கும் தமிழ்நாடு, இவ்வாறான உலகளாவிய திறன் மையம் (GCC) மற்றும் ஆராய்ச்சி & மேம்பாடு ஆகிய துறைகளில், நல்ல வளர்ச்சி பெற்று வருவது மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மிகப்பெரிய பயனை ஏற்படுத்தி வருகிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அமெரிக்காவுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்ட போது கடந்த 5.9.2024 அன்று சிகாகோவில், லிங்கன் எலக்ட்ரிக், விஷய் பிரிஷிஷன் மற்றும் விஸ்டியன் ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரங்கள் வருமாறு:

### லிங்கன் எலக்ட்ரிக் நிறுவனம்

